# வளர்ந்தவர்களுக்கான ஒரு வரலாறு

## (2 சாமுவேல் 24; 1 நாளாகமம் 21)

*இந்தப் பாடத்திற்கு "வளர்ந்தவர்களுக்கான ஒரு வரலாறு" என்ற தலைப்பிடப்பட்டுள்ளது, ஆனால் இது ஒரு படுக்கை நேரத்துக் கதையாக இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. நீங்கள் விழித்திருக்க வேண்டும் என்றே நான் விரும்புகின்றேன்! நமது இந்த வரலாறு 2 சாமுவேல் 24ல் மற்றும் அதை, பல விவரங்களைச் சேர்த்து மறுபடியும் கூறுகிற 1 நாளாகமம் 21 ஆகியவற்றில் காணப்படுகிறது.*

*ரோமர் 15:4, "தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம், நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது" என்று கூறுகிறது. பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டுள்ளவைகள் நமக்குச் சட்டங்களாக இருப்பதில்லை, ஆனால் அவைகள் மதிப்புள்ளவையாக இருக்கின்றன. (1) அவைகள் "நமக்குப் போதனையாக" எழுதப்பட்டுள்ளன. பழைய ஏற்பாட்டில் உள்ளவற்றில் அதிகமானவை குறிக்கோள் வகை போதனையாயிருப்பதில்லை, ஆனால் எடுத்துரைப்புகளாக - நாம் பாடங்களைப் பெற வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கும் வரலாறுகளாக - உள்ளன. (2) அவைகள் நம்மிடம் "சகிப்புத்தன்மையை" அல்லது நீடிய பொறுமையை வேண்டுகின்றன. (3) அவைகள் நம்மை ஆறுதல்படுத்தி "நம்பிக்கையூட்டுகின்றன." (4) அவைகள் நமக்கு நம் ஆத்தும நங்கூரமான "நம்பிக்கையை" தருகின்றன. 2 சாமுவேல் 24 மற்றும் 1 நாளாகமம் 21ன் எடுத்துரைப்புகளைப் பயன்படுத்துவதில் நாம் ஏழு சத்தியங்களைக் கவனிப்போம்.*

### வளர்ந்தவர்கள் இன்னும் பாவம் செய்யக்கூடும்
### *(2 சாமுவேல் 24:1-10; 1 நாளாகமம் 21:1-8)*

*பல கதைகள் "ஒரு காலத்திலே" என்று தொடங்குகின்றன. அந்த சூத்திரத்தைப் பயன்படுத்தி, நாம் "ஒரு காலத்திலே, தாவீது ராஜா மக்கள் தொகைக் கணக்கெடுப்பு செய்ய வேண்டும் என்று முடிவு செய்தார்" என்று தொடங்குவோம். வேதாகமம், "அப்படியே ராஜா தன்னோடிருக்கிற சேனாபதியாகிய யோவாபைப் பார்த்து: 'ஜனங்களின் இலக்கத்தை நான் அறியும்படிக்கு, நீ தாண்முதல் பெயெர்செபா மட்டுமுள்ள இஸ்ரவேலின்*

*கோத்திரமெங்கும் சுற்றித்திரிந்து ஜனங்களைத் தொகையிடுங்கள்' என்றான்" (2 சாமு. 24:2) என்பதாகக் கூறுகிறது. இந்த வரலாறு, தாவீதின் வாழ்வும் ஆட்சியும் முடியும் வேளைக்கு அண்மையில் நடைபெற்றது. இந்த முதிய மனிதர் மக்கள்தொகைக் கணக்கெடுக்க முடிவு செய்தார், அதை அவர் செய்தபோது, அவர் பாவம் செய்தார்.*

*அவர் செய்த செயல் ஏன் பாவமாயிருந்தது என்று தெளிவாகத் தெரிவதில்லை. மற்ற வேளைகளில் தேவன் மக்கள் தொகைக் கணக்கெடுக் கும்படிக்கு ஆணையிட்டிருந்தார்; ஆனால் இந்த வேளையில், ஏதோ சில காரணங்களுக்காக, தேவன் அதை விரும்பாதிருந்தார். தாவீதின் படைத் தலைவரான யோவாப், தாவீது தமது மனமேட்டிமையின்படி பயணம் செய்வதாக உறுதியாய் நினைத்து, அதைப் பற்றி அவரிடம் பேச முயற்சி செய்தார்: "ராஜாவாகிய என் ஆண்டவனுடைய கண்கள் காணும்படி உம்முடைய தேவனாகிய கர்த்தர் ஜனங்களை இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும், நூறு மடங்கு அதிகமாய் வர்த்திக்கப் பண்ணுவாராக; ஆனாலும் என் ஆண்டவனாகிய ராஜா இந்தக் காரியத்தை விரும்புகிறது என்ன?" (2 சாமு. 24:3).[1] யுத்தம் செய்யத்தக்க மனிதர்கள் மாத்திரம் எண்ணித் தொகையிடப்பட்டார்கள் என்பது உறுதி: "யோவாப் ஜனத்தை இலக்கம் பார்த்த தொகையை ராஜாவுக்குக் கொடுத்தான்; இஸ்ரவேலிலே பட்டயம் உருவத்தக்க யுத்த சேவகர் எட்டு லட்சம் பேர் இருந்தார்கள்; யூதா மனுஷர் ஐந்து லட்சம் பேர் இருந்தார்கள்" (2 சாமு. 24:9). முந்திய ஜனத் தொகைக் கணக்கிடுதல் போல இது ஒருங்கமைக்கப்பட்ட மக்கள் தொகைக் குரியதாகவோ, அல்லது மதரீதியான நோக்கம் கொண்டதாகவோ இருக்க வில்லை. இது கண்டிப்பான இராணுவ நோக்கங்களைக் கொண்டிருந்தது.*

*தாவீது மாம்ச ரீதியான படையின்மீது அதிக நம்பிக்கையையும் தேவன்மீது குறைவான நம்பிக்கையையும் வைத்தார் என்பதற்கான சுட்டிக் காண்பித்தலே இது பாவமாயிருந்தமைக்குக் காரணமாகும் என்பது மிகச் சிறந்த யூகமாயிருக்கும். தாவீது கோலியாத்திற்கு எதிராகச் சென்றிருந்த போது, ஒரே ஒரு கவணை மாத்திரம் எடுத்துக்கொண்டு சென்றிருந்தார், மாம்ச ரீதியான பெலம் என்பது அப்பொழுது அவருக்கு முக்கியத்துவமற்ற தாக இருந்தது. அவர் வெறும் நானூறு மனிதர்களை மாத்திரம் கூட்டிக் கொண்டு, அமலேக்கியப் படையை எதிர்த்துப் போரிடச் சென்றபோது (இ.வ. 1 சாமு. 30:10), அவரது படையில் இருந்த மனிதர்களின் எண்ணிக்கை அவருக்கு பெரிதும் அக்கறை கொள்ள வேண்டிய விஷயமாயிருந்ததில்லை. தேவனுடைய பிரசன்னம் இனியும் போதுமானதாயிருந்ததில்லை என்பது போன்று காணப்பட்டது. அவர் எத்தனை மனிதர்களை யுத்தத்திற்கு அனு ப்ப இயலும் என்பதை அறிய விரும்பினார்.*

*இது ஏன் பாவமாயிருந்தது என்பதை நாம் எப்பொழுதாவது உண்மையாக அறிய முடிந்தாலும் இல்லாவிட்டாலும், இது பாவமாயிருந் தது என்பதை நாம் அறிகின்றோம். 1 நாளாகமம் 21ன் முதல் வசனம், ஒரு முக்கியமான விவரத்தைக் கூடுதலாகத் தருகிறது: "சாத்தான் இஸ்ரவேலுக்கு விரோதமாய் எழும்பி, இஸ்ரவேலைத் தொகையிடுகிறதற்குத் தாவீதை ஏவி விட்டது." தேவன் அதை அனுமதித்தார் (2 சாமு. 24:1), ஆனால் சாத்தான்*

*இதைத் தூண்டுபவனாய் இருந்தான்.[2] வசனம் 7, "இந்தக் காரியம் தேவனுடைய பார்வைக்கு ஆகாததானபடியினால்" என்று கூறுகிறது. மேலும், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஏறக்குறைய முடிவடைந்த பின்பு, தாவீது பாவம் செய்திருந்தார் என்பது பற்றி அவரது சிந்தையில் கேள்வி எதுவும் இருக்கவில்லை: "இவ்விதமாய் ஜனங்களை எண்ணின பின்பு, ராஜாவின் இருதயம் அவனை வாதித்தது. அப்பொழுது தாவீது கர்த்தரை நோக்கி: 'நான் இப்படிச் செய்ததினாலே பெரிய பாவஞ் செய்தேன் ...' என்றான்" (2 சாமு. 24:10அ).*

*வளர்ந்தவர்கள் இன்னும் பாவம் செய்யக் கூடும். வளர்ந்தவர்கள் இன்னும் சாத்தானால் சோதிக்கப்பட்டு, வஞ்சிக்கப்படக்கூடும்.*

*வாழ்வில், பாவம் என்பது ஒரு பிரச்சனையல்ல என்றுள்ள இடம் வரையிலும் நாம் சென்று அடைதல் என்பது, அதாவது நாம் பாவம் செய்தல் என்பதைப் பற்றியே மறந்துபோகுமளவுக்கு ஞானமும் பக்குவமும் உள்ளவர்களாகுதல் என்பது நினைத்துப் பார்க்க ஒரு மேன்மையான விஷயமாகவே உள்ளது; ஆனால் விஷயம் அப்படியிருப்பதில்லை. யோபு 32:9 ஒரு தெளிவான சத்தியத்தைக் கொண்டுள்ளது: "பெரியோரெல்லாம் ஞானிகளல்ல; முதியோரெல்லாம் [அதாவது வயது முதிர்ந்தவரெல்லாம்] நீதியை அறிந்தவர்களுமல்ல."*

*சாத்தானுடைய சூழ்ச்சிகளுக்கு எதிரான தடுப்புத்தன்மை கொண்டவராக ஒரு மனிதர் இருந்திருக்க முடியும் என்றால், அவர் தாவீது தான் என்று நாம் நினைக்கலாம். அவர் இன்னமும் "தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதராகவே" இருந்தார். பத்சேபாளின் விஷயம் மற்றும் அதற்குப் பின்பு ஏற்பட்ட விளைவுகளில் அவர் பயங்கரமான ஒரு தண்டனையினூடே கடந்து சென்றிருந்தார், மற்றும் அவர் அதிலிருந்து, தமது தனிப்பட்ட ஒப்புக் கொடுத்தலில் பெலமுள்ளவராக வெளி வந்திருந்தார். ஆயினும் அவர் தடுப்புத் தன்மை கொண்டவராக இருந்ததில்லை. தாவீது முடிவு வரையிலும் உண்மையுள்ளவராக நிலைத்திருந்தார், ஆனால் அவர் முடிவு வரையிலும் தவறக்கூடியவராகவும் நிலைத்திருந்தார்.*

*சோதிக்கப்படுதலைக் குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படியும், நமது இளைஞர்கள் எவ்வளவு சுலபமாய் வீழ்ந்துபோகக் கூடும் என்பதை உணர்ந்து அறியும்படியும் நாம் அவர்களுக்குக் கூறுகின்றோம். நாம் வயதானவர்களாகும்போது கூட இன்னமும் தாக்குதலுக்கு உள்ளானவர்களாகவே இருக்கின்றோம் என்பதை நாம் உணர்ந்தறிய வேண்டும். நாம் இளைஞர்களாயிருந்தபோது தாக்குதலுக்கு உள்ளாயிருந்த வழிகளில் இருந்து மாறுட்ட வழிகளில் தாக்குதலுக்கு உள்ளாகக் கூடியவர்களாயிருக்கலாம், ஆனால் நாம் இன்னமும் தாக்குதலுக்கு உள்ளானவர்களாகவே இருக்கின்றோம். தாவீது முதியவரானபோது, அவரது இருதயத்தின் இச்சை நிறைந்த தன்மையின் மூலம் சாத்தான் அவருக்கு வீழ்ச்சியைக் கொண்டு வரவில்லை; அவன் தாவீதின் இருதயத்திலிருந்த மேட்டிமையின் மூலம் அவருக்கு வீழ்ச்சியைக் கொண்டு வந்தான். நாட்டைப் பொருத்தமட்டில் அதன் முடிவானது மிகவும் துன்பகரமானதாயிருந்தது.*

*நம்மில் முதியவர்களாக இருக்கின்றவர்கள், நாம் சோதிக்கப்*

*படுவதிலிருந்து விலக்குப் பெற்றிருப்பது இல்லை என்பதை உணர்ந்து அறிய வேண்டும். ஒரு குறிப்பிட்ட வயதில் நாம், குறிப்பிட்ட சில வரிகளில், இருந்து விலக்குப் பெறலாம், ஆனால் நாம் ஒருபோதும் பாவத்திலிருந்து விலக்குப் பெற்று இருப்பதில்லை. இது இன்னமும் உண்மையானதாகவே உள்ளது, தன்னை நிற்கிறவன் என்று நினைக்கிறவன் "விழாதிருக்கும்படி எச்சரிக்கையாயிருக்கக் கடவன்'' (1 கொரி. 10:12). பிசாசானவன் "கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான்" (1 பேது. 5:8) என்பது இன்னமும் உண்மையாகவே உள்ளது. நீங்கள் ஒரு குறிப்பிட்ட வயதை அடைவதால் சாத்தான் உங்கள் பெயரையும் முகவரியையும் மறந்து விடமாட்டான்; அல்லது அவன் உங்கள் பலவீனத்தை மறந்து விட மாட்டான் (யாக். 1:14). மேலும், "பாவத்தின் சம்பளம் மரணம்" என்பது இன்னமும் உண்மையானதாக உள்ளது (ரோமர் 6:23). ஒரு சில மாதங்களில் நான் [டேவிட் ரோப்பர்], முதிய குடிமக்களுக் கான சலுகைகளுக்குத் தகுதியுடையவனாகி விடுவேன், ஆனால் பாவத்தின் மீது, முதிய குடிமக்களுக்கான எந்த வித சலுகையும் இருப்பதில்லை. சம்பளம் என்பது எல்லாருக்கும் ஒன்றுபோலவே உள்ளது.*

## *வளர்ந்தவர்கள் மென்மையான மனச்சாட்சிகளைத் தக்க வைத்துக் கொள்வது அவசியமாகிறது (2 சாமுவேல் 24:10; 1 நாளாகமம் 21:7, 8)*

*2 சாமுவேல் 24ல் மாபெரும் வேத வசனப்பகுதிகள் பல காணப் படுகின்றன. அவற்றில் வசனம் 10 ஒன்றாகும். இவ்வசனமானது, தாவீது "தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனிதர்" என்று கூறப்பட்டது ஏன் என்பதை மீண்டும் காண்பிக்கிறது: "இவ்விதமாய் ஜனங்களை எண்ணின பின்பு, ராஜாவின் இருதயம் அவனை வாதித்தது. அப்பொழுது தாவீது கர்த்தரை நோக்கி: 'நான் இப்படிச் செய்ததினாலே பெரிய பாவஞ் செய்தேன்; இப்போதும் ஆண்டவரே, உமது அடியானின் அக்கிரமத்தை நீக்கிவிடும்; நான் மகா புத்தியீனமாய்ச் செய்தேன்' என்றான்."*

*மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஏறக்குறைய முடிவுபெற்றது. பென்யமீன் மற்றும் லேவி கோத்திரங்கள் தவிர மற்ற கோத்திரங்கள் யாவும் எண்ணித் தொகையிடப்பட்டிருந்தன (1 நாளா. 21:6). உண்மை விவரங் களையும் எண்ணிக்கைகளையும் யோவாப் தாவீதிடம் கொடுத்தார். ஒன்பது மாதங்களுக்கும் மேலாகச் செய்யப்பட்ட இந்த பணி குறித்த தடிமனான அறிக்கைகள் தாவீதின் படுக்கை அருகே இருப்பதை ஒருவர் கற்பனை செய்யக்கூடும். தாவீது அதை வாசித்தார், பின்பு படுக்கைக்குச் சென்றார். இருப்பினும், அவரால் உறங்க இயலவில்லை. அவர் உள்ளாக கடையப்பட்டுக் கொண்டிருந்தார். என்ன தவறு நடந்தது? அவரது மனச்சாட்சி அவரை உலுக்கியது. இல்லை, அது போதிய அளவு பலம் கொண்டதாக இருக்கவில்லை. அவரது மனச்சாட்சி அவரை பிரித்துக் கிழித்துக் கொண்டிருந்தது. நமது வேத வசனப் பகுதி, அவரது இருதயம்*

அவரை "வாதித்தது" என்று கூறுகிறது. (NKJVயில் "தாவீதின் இருதயம் அவரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தது" என்றுள்ளது.)

தாவீது பூரணப்பட்ட ஒரு மனிதர் அல்ல. நம் எல்லாரையும் போலவே, அவரும் தமது பலவீனங்களைக் கொண்டிருந்தார். அவரும் தமது மனச்சாட்சியை உடையவராயிருந்தார். அவர் கர்த்தரை இன்னும் அதிகமாய் நெருங்கியிருந்ததால், அவர் ஏதேனும் தவறு செய்தபோது, அவரது மனச்சாட்சி அவரைத் தனிமையிலிருக்க விடாதிருந்தது.

மனச்சாட்சி என்பது, தேவன் ஒவ்வொரு மனிதருக்கும் கொடுத்துள்ள விசேஷித்த வெகுமதியாக உள்ளது, இது சரியான மற்றும் தவறான விஷயங்களை அறிகிற ஒரு உள்ளுணர்வாக, தவறென்று நாம் நம்புகின்றவற்றைச் செய்கிறபோது நம்மை மோசமாக உணர வைக்கிற நமக்குள் இருக்கும் ஒரு பாகமாக, நம்மை *குற்ற உணர்வுள்ளவர்களாக்குகிற* ஒன்றாக இருக்கிறது.

இன்றைய நாட்களில் மக்கள் மனச்சாட்சியைப் புறக்கணிக்கின்றவர்களாகவும், சரி தவறு என்ற பழமை வாய்ந்த கருத்துக்களைப்பற்றிக் கவலைப்படாதவர்களாகவும் இருக்கும்படியாகச் சொல்லப்படுகிறார்கள். அவர்கள் சமூக விதிகளை மீறி விட்டாலோ அல்லது தேவனுடைய கட்டளைகள் என்பவற்றை மீறி விட்டாலோ, மோசமாய் உணர வேண்டாம் என்று கூறப்படுகின்றார்கள். விசேஷமாக, குற்ற உணர்வு என்ற கருத்து தாக்கப்படுகிறது. "குற்ற உணர்வடைய வேண்டும் என்று அவசியமில்லை" என்று நமக்குக் கூறப்படுகிறது. "மக்களைக் குற்ற உணர்வுப் பயணத்திற்கு அனுப்பாதீர்கள்" என்று பிரசங்கியார்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

நமக்கு மனச்சாட்சியைக் கொடுத்ததில் தேவன் ஒரு நோக்கம் கொண்டிருந்தார். அவர் நமது சொந்த நன்மைக்காகவே - பாவம் செய்வதிலிருந்து நம்மை ஊக்கம் குறையச் செய்வதற்காக, நாம் பாவம் செய்யும்போது, குற்ற உணர்வை அடைந்து, இரக்கம் மன்னிப்பு ஆகியவற்றிற்காக மீண்டும் அவரிடம் திரும்புவதற்காக - நம் ஒவ்வொருவருக்குள்ளும் மனச்சாட்சியை வைத்தார். மனச்சாட்சி தனது வேலையைச் செய்ய வேண்டுமென்றால், அது உணர்வுள்ளதாக, மென்மையானதாக, தொடக்கூடியதாக இருக்க வேண்டும்.

நான் அறிந்துள்ள இளம் மக்களில் பெரும்பாலானோர், அந்த வகையான மனச்சாட்சியைக் கொண்டிருந்தார்கள். இந்த உலகத்துடன் சாகசம் செய்து கொண்டிருப்பவர்கள், மனிதர்களின் மற்றும் தேவனின் சட்டங்களை மீறி நடப்பவர்கள் ஆகியோரும் கூட, சரியான சூழ்நிலைகளில், தங்கள் பாவங்களின் ஏராளத்தன்மை பற்றிய உணர்வுகளினால் வழக்கமாகத் தொடப்படக்கூடும். இளம் மக்கள் தங்கள் கன்னங்களில் கண்ணீர் வழிய, [ஞானஸ்நானம் பெறும்படிக்கு விடப்படும்] அழைப்பைக் கேட்டு முன் வருவதை நான் அடிக்கடி பார்த்திருக்கின்றேன்.

நமக்கு வயதாகின்றபோது, நாம் ஜாக்கிரதையாய் இராதுபோனால், நமது மனச்சாட்சியானது அதன் மென்மைத் தன்மையை இழந்து போகக்கூடும். நாம் மிகவும் அறிவுள்ளவர்களாக, உலக ஞானம் கொண்டவர்களாக மாறி விடுகின்றோம். பகுத்தறிவு வாதத்தில் நாம் சிறந்தவர்களாகி

விடுகின்றோம். வாழ்வில் கறுப்பு வெள்ளை என்ற தனிப்பட்ட பகுதிகளைக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, நமது கண்களில் ஒவ்வொன்றும் சாம்பல் நிற நிழலாகத்தோற்றம் தருகிறது. சுருக்கமாய்க் கூறினால், நமது மனச் சாட்சியானது உலர்ந்து கடினமாகிப் போகிறது (1 தீமோ. 4:1). அதை நீங்கள் சந்தேகிக்கின்றீர்களா? கடந்த ஆண்டிலோ அல்லது அதற்குச் சற்று முன்னதாகவோ, தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, ஜெபம் செய்யும்படி கேட்டுக்கொண்டு பதில்செயல் செய்திருந்த மக்களைப் பற்றி நினைத்துப் பாருங்கள். அவர்களில் எத்தனைபேர் முப்பது வயதிற்குக் கீழ்ப்பட்டவர் களாய் இருக்கின்றார்கள்? அவர்களில் எத்தனை பேர் முப்பது வயதிற்கு மேற்பட்டவர்களாய் இருக்கின்றார்கள்? நாம் முதிர்வயதை அடையும் போது, நமது மனச்சாட்சிக்கு ஏதாவது ஆகிவிடக்கூடும்.

தாவீது அதைப் போன்றிருக்கவில்லை. அவருடைய மனச்சாட்சி இன்னமும் மென்மையானதாயிருந்தது.

## வளர்ந்தவர்கள் தங்கள் நடவடிக்கைகளின் அதிக தூரம் பரவும் செயல்விளைவைக் குறித்து உணர்ந்து அறிய வேண்டும் (2 சாமுவேல் 24:11-15; 1 நாளாகமம் 21:9-14)

மூன்றாவது சத்தியமானது வளர்ந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் தெளிவுமிக்க ஒன்றாக உள்ளது. நாம் யாவருமே பிறர் மீது - நன்மைக்கோ அல்லது தீமைக்கோ - செல்வாக்குள்ளவர்களாக இருக்கின்றோம் என்று இயேசு வலியுறுத்தினார் (மத். 5:13-16). இதை நாம் நமது முன் பருவ இளம் மக்களுக்கு வலியுறுத்த முயற்சி செய்கின்றோம். இளம் மனிதர்கள் நல்ல உதாரணங்களாக இருக்க வேண்டியது அவசியம் என்று பவுல் தீமோத்தேயு வுக்கு கூறினார் (1 தீமோ. 4:12). “இது என்னை மாத்திரமே பாதிக்கும்” என்று நினைத்து ஆனால் தங்கள் தாய் தந்தையின் இருதயங்களை உடைந்து போகச் செய்து, தங்களைப்பற்றி அக்கறை கொண்டவர்களை உற்சாக மிழக்கச் செய்து, மற்ற மக்களையும் பாவத்தில் வழிநடத்துகின்ற இளம் பருவ மக்கள் எத்தனைபேர் உள்ளார்கள்? இதை அறிய வேண்டியவர்கள் இளம் வயதினர் மாத்திரம் அல்ல. இந்தத் தெளிவான சத்தியத்தை, நம்மில் முதியவர்களாக இருப்பவர்களும் அறிவது அவசியமாக உள்ளது: நாம் எவ்வளவு நீண்ட நாள் வாழ்கின்றோமோ, அவ்வளவு அதிகமாக மக்கள், நாம் தேவனை விட்டுப் பிரியும்போது துன்புறுத்தப்படுவார்கள். இதற்கு, 2 சாமுவேல் 24:13 மற்றும் அதைத் தொடர்ந்து வருகிற வசனங்களில் உள்ள தாவீதின் பாவம் பற்றிய தொடரைக் காட்டிலும் சிறந்த விவரிப்பு வேறெதுவும் இருப்பதில்லை.

நமது வரலாற்றில், தாவீது தமது பாவத்தை அறிக்கையிட்டு தேவனு டைய மன்னிப்பைக் கேட்டார். அது அற்புதமானதாக உள்ளது, ஆனால் தாவீதின் வாழ்வில் அதிக விவரிப்பாக நாம் கண்டுள்ளபடி, பாவத்தின் குற்ற உணர்வு நீக்கப்பட்டபோதும் கூட, பாவத்தின் விளைவுகள் தாமதித்து

இருக்கின்றன. "மனுஷன் எதை விதைக்கின்றானோ, அதையே அறுப்பான்" - மன்னிப்பு என்பது ஈடுகொடுத்து நிற்பது இல்லை.

இதற்கான விவரித்தல் ஒன்றை, நான் டெக்சாஸை விட்டு வருமுன் வெகுவிரைவிலேயே கண்டேன். ஒரு நிகழ்ச்சியானது, உயர்நிலைப் பள்ளியின் மூத்த மாணவர்கள் தங்களின் உல்லாச/அனுபவ கல்விப் பயணத்தின் போது மதுபானம் அருந்திச் சென்றதைப் பற்றிய செய்தியை ஏற்படுத்திற்று. அவர்கள் தாங்கள் செய்தவற்றை அறிக்கை செய்தபோது, அவர்கள் தங்கள் மூத்த கல்வியாண்டில் மீதமிருந்த ஒரு சில வாரங்கள் தனிமையில் படிக்க வேண்டியதாயிற்று. பொதுமக்கள் அதிக கூக்குரலிட்டார்கள்: "அவர்கள் அறிக்கை செய்துவிட்டார்கள்; எனவே அவர்கள் பதிவேடு தெளிவாக்கப்பட வேண்டும். அவர்களுக்குத் தண்டனை எதுவும் தரப்படக்கூடாது!" ஆம், அந்த மாணவர்கள் அறிக்கையிட்டிருந்தார்கள் - அவர்கள் அதற்காக பாராட்டப்பட வேண்டியவர்கள்தான் - ஆனால் அவர்கள் அப்பொழுதும் கூட, தெளிவாக விளக்கப்பட்டிருந்த சட்டங்களை மீறியிருந்தவர்களாக, விளைவுகள் என்னவாக இருக்கும் என்பதை முன்னரே புரிந்து கொண்டவர்களாகவே இருந்தார்கள். அறிக்கையிடுதல் என்பது அந்த விளைவுகளை நீக்கிப் போடுவதில்லை.

இந்த சத்தியத்தை நாம் புரிந்துகொள்வது அவசியமாகும்! ஒருமுறை மதுபானம் அருந்துதல், ஒருமுறை முன் ஜாக்கிரதையற்று இருத்தல், முப்பது நிமிடங்கள் ஒரு லாட்ஜில் [பெண்ணோருத்தியுடன் விபசாரம் செய்யும்படி] தங்குதல் என்பது போன்றவை, அதன் விளைவுகளை வாழ்நாள் முழுவதற்கும் நீடித்திருக்கச் செய்து விடும்!

பாவம் என்பது, பல்பொருள் அங்காடியில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள கொள்கலன்களில் ஒன்றை, அதைச் சுற்றியுள்ளவற்றைத் தொந்தரவு செய்யாமல் எடுப்பதைப் போன்றது என்று பலர் நினைக்கின்றார்கள். இதற்கு மாறாக, பொருட்கள் கொண்ட கொள்கலன்கள் ஏராளமாக அடுக்கி வைக்கப்பட்ட காட்சியொன்றைக் கற்பனை செய்துகொள்ளுங்கள். பின்பு, அந்தக் குவியலில் அடிப்பகுதிக்கு அண்மையில் உள்ள கொள்கலனை எடுத்துவிட்டு, அந்தக்குவியல் முற்றிலும் உருண்டு வீழ்வதைக் கவனித்தல் பற்றி கற்பனை செய்து பாருங்கள். பாவத்தின் செயல்விளைவுகள் இது போன்றவையாகவே உள்ளன!

நாம் பார்த்துக் கொண்டிருக்கும் வரலாற்றிற்குத் திரும்பி, இந்த சத்தியமானது 2 சாமுவேல் 24ல் விவரிக்கப்பட்டுள்ளதைக் காண்போம். நள்ளிரவு வேளையில் தாவீது தமது பாவத்தை ஒப்புக்கொண்டதைத் தேவன் கேட்டார். அடுத்தநாள் காலையில், தேவன் காத் என்ற தீர்க்கதரிசியை அவரிடம் அனுப்பி வைத்தார் (வ. 11, 12அ). இந்த காத் என்பவர் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு வனாந்தரத்தில் தாவீதிடம் வந்திருந்து, அவருக்கு ஆவிக்குரிய ஆலோசகராயிருந்தார் (1 சாமு. 22:5). காத் என்பவருக்கு இப்போது வயது சென்றிருந்தாலும், ராஜாவுக்கு தேவனுடைய ஆலோசகர்களில் ஒருவராக அவர் நிலைத்திருந்தார் (1 நாளா. 29:29; 2 நாளா. 29:25).

தேவனுடைய அறிவுறுத்தல்களுடன் காத், தாவீதிடம் வந்த

*வேளையில், அவர் ஒரு அன்பார்ந்த தந்தை தமது பிள்ளையை சிட்சிப்பது போன்ற வகையில் வந்தார். அவர் தாவீதின் - மற்றும் நாட்டின் - இறுதியான நன்மைக்காகவே வந்தார். உண்மையில் அவர் தாவீதிடம், "உங்களுக்குரிய மருந்தை எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் பாடத்தைக் கற்றுக் கொள்ளுங்கள். பின்பு வாழ்வைத் தொடர்ந்து நடத்துங்கள்'' என்றே கூறினார். நாம் வலியுறுத்தியுள்ளபடி, தேவன் தமது பிள்ளைகளைச் சிட்சிக்கின்றார் (எபி. 12:4-13).*

*தாவீதை அடிக்க வேண்டிய பிரம்பை அவரே தேர்ந்துகொள்ள வாய்ப்பு அளிக்கப்பட்டது என்பது இந்த சூழ்நிலையின் அசாதாரண விஷயமாக இருந்தது. தாவீதிடம் காத், " 'மூன்று காரியங்களை உனக்கு முன்பாக வைக்கின்றேன், அவைகளில் ஒரு காரியத்தைத் தெரிந்துகொள், அதை நான் உனக்குச் செய்வேன்' என்று கர்த்தர் உரைக்கிறார்" (2 சாமு. 24:12) என்று கூறினார். ஒருவேளை, நீங்கள் சிறுபிள்ளையாக இருந்தபோது உங்கள் ஆசிரியர் உங்களைச் சிட்சிப்பதற்கான விருப்பத் தேர்வை உங்களுக்குக் கொடுத்து இருக்கலாம்: "ஒரு வாரத்திற்கு, பள்ளி முடிந்த பின்பும் ஒரு மணி நேரம் அதிகமாகவே பள்ளியிலேயே இரு ... அல்லது ஒரு டஜன் பிரம்படி வாங்கிக் கொள்." தாவீதுக்குப் பின்வரும் விருப்பத் தேர்வுகள் தரப்பட்டன:*

> *"மூன்று வருஷத்துப் பஞ்சமோ? அல்லது உன் பகைஞரின் பட்டயம் உன்னைப் பின்தொடர நீ உன் சத்துருக்களுக்கு முன்பாக முறிந்தோடிப்போகச் செய்யும் மூன்றுமாதச் சங்காரமோ? அல்லது மூன்றுநாள் கர்த்தருடைய தூதன் இஸ்ரவேலுடைய எல்லையெங்கும் சங்காரம் உண்டாகும்படி தேசத்தில் நிற்கும் கர்த்தருடைய பட்டயமாகிய கொள்ளை நோயோ? இவைகளில் ஒன்றைத் தெரிந்து கொள்" என்று கர்த்தர் உரைக்கிறார் (1 நாளா. 21:12).*

*இந்த மூன்று விருப்பத் தேர்வுகளும் பொதுவான ஒரு விஷயத்தைக் கொண்டிருந்தன. இவை யாவும் தாவீதின் பாவத்தினுடைய இருதயம் போன்ற மையப் பகுதியைத் தாக்குவதாயிருக்கும். இவை யாவும் யுத்தம் செய்யும் வயதுடைய மனிதர்களின் எண்ணிக்கையைக் குறைத்து விடுவதாயிருக்கும்.*

*''அப்பொழுது தாவீது காத்தை நோக்கி: 'கொடிய இடுக்கணில் அகப்பட்டிருக்கிறேன்' என்று கூறினார்'' (2 சாமு. 24:14அ). தாவீதின் பாவத்தினால் பல மனிதர்கள் இறக்கப் போகின்றார்கள்! அது விழுங்கு வதற்குக் கசப்பான மாத்திரையாக இருந்தது.*

*தாவீது கொள்ளை நோயைத் தேர்ந்து கொண்டார். ஒருவேளை அவர் தாமும் கூட, எஞ்சியுள்ள மக்கள் தொகையுடன் சமமான அளவில் அபாயத் திற்கு உள்ளாகும் நிலைக்கு ஆளாக்குவது, அது ஒன்றுதான் என்பதால் அவர் அந்த விருப்பத்தேர்வை மேற்கொண்டிருக்கலாம். வேதாகமம், அவரது தீர்மானத்திற்கான காரணத்தைத் தருகிறது. "இப்போது, நாம் கர்த்தருடைய கையிலே விழுவோமாக; அவருடைய இரக்கங்கள் மகா பெரியது" (2 சாமு. 24:14ஆ). மனிதருடைய கரங்களில் அல்லது தேவனுடைய கரங்களில் விழுதல் என்பவற்றிற்கிடையில் நீங்கள் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்து*

*கொள்ளவேண்டிய நிலையில் இருந்தால், எப்போதும் தேவனுடைய கரங்களில் விழுவதையே தேர்ந்து கொள்ளுங்கள். தேவன் நியாயமான வராக இருக்கின்றார்; தேவன் செய்கின்றவை எதுவும் நம் நன்மைக்கான தாகவே இருக்கின்றது; மற்றும் அது முடிந்தபின்பு, தேவன் மன்னிக்கின்றார். இதற்கு மாறாக, மனிதன் கொடூரம் வாய்ந்தவனாயிருக்கக் கூடும். மனிதன் தனக்கு பிரியமானவற்றைச் செய்கின்றான் - மற்றும் என்றென்றைக்கும் விரோதப்போக்கை உடையவனாக இருக்கின்றான்.*

*"அப்பொழுது கர்த்தர் இஸ்ரவேலிலே அன்று காலமே தொடங்கிக் குறித்த காலம் வரைக்கும் கொள்ளை நோயை வரப் பண்ணினார்: அதினால் தாண்முதல் பெயர்செபா மட்டுமுள்ள ஜனங்களில் எழுபதினாயிரம் பேர் செத்துப்போனார்கள்" (2 சாமு. 24:15). "தாண்முதல் பெயெர்செபா மட்டுமுள்ள" பகுதியில்தான் மக்கள்தொகை கணக்கிடப்பட்டது (2 சாமு. 24:2). இவ்வளவு அதிகமான ஜனங்களை இவ்வளவு விரைவாகக் கொல்லக் கூடிய கொள்ளை நோய் எது என்று என்னால் கற்பனை செய்து காண இயல வில்லை, ஆனால் உடனடியான மரணம் என்பது நாடு முழுவதிலும் தீவிர மாய் நடையிட்டது. [மரணங்கள் பற்றிய] அறிக்கை வந்த வேளையில், தாவீதின் இருதயத்தில் ஏற்பட்ட பெருந்துன்பத்தை உங்களால் கற்பனை செய்ய இயலவில்லையா? "எழுபதினாயிரம் ஆண்கள் ... இறந்து போனார் கள்" - பெண்கள் யாருமல்ல, ஆண்கள் மாத்திரம். அநேகமாக இவர்கள் யுத்தம் செய்யும் வயதுடையவர்களாக, தாவீது அவ்வளவு பெருமையாக நினைத்துக் கொண்டிருந்த மக்களாக இருந்திருக்கலாம்.*

*இது ஒரு மனிதரின் பாவமானது அதிக தூரம் பரவும் செயல்விளைவைக் குறித்து மனதை அச்சுறுத்தும் விவரிப்பாக உள்ளது.*

*ஆம், வளர்ந்தவர்கள் பாவம் செய்யக்கூடும். சிலர் மத்திய வயதுப் பித்தம் கொண்டுள்ளார்கள். சிலர் பொறுப்பற்ற இரண்டாம் குழந்தைப் பருவத்திற்கு வேண்டுமென்றே செல்லுகின்றார்கள். தேவனே, நாங்கள் பொறுப்பற்றவர்களாய்ச் செயல்படுகையில் பாதிக்கப்படுகின்ற வாழ்வு களைக் காண எங்களுக்கு உதவும். எழுபதினாயிரம் பேர் இறந்து போகா திருக்கலாம், ஆனால் நாம் அன்பைக்கொல்ல, இருதயங்களை உடைக்க, விசுவாசத்தை அழிக்க, விசுவாசிகளின் நம்பிக்கையைத் தகர்க்கக் கூடும், மேலும் மற்றவர்கள் தேவனிடத்திலிருந்து விலகி இழந்து போகப்படக் காரணமாகவும் கூடும்.*

*வளர்ந்தவர்கள் தங்கள் ஒவ்வொரு நடவடிக்கையின் அதிக தூரம் பரவும் செயல்விளைவைக் குறித்து உணர்ந்து அறிய வேண்டும்.*

# வளர்ந்தவர்கள் தங்கள் செயல்களுக்கான முழுப்பொறுப்பையும் தாங்களே ஏற்றுக் கொள்ள வேண்டும்
# (2 சாமுவேல் 24:16, 17; 1 நாளா. 21:15-17)

*பக்குவமற்றவர்கள் தங்களுக்கு நேரிடுகிறவைகள் பற்றி வேறு யார் மீதாவது பழிபோட விரும்புகின்றார்கள்: "யாரோ ஒருவர் என்னைக் கீழே தள்ளி விட்டார். யாரோ ஒருவர் என்னைத் தோல்வியுறச் செய்துவிட்டார். இது அல்லது அது நடந்திருந்தால் நான் இந்த இக்கட்டான நிலையில் இருந்திருக்க மாட்டேன்." பக்குவமடைந்தவர்களோ - உண்மையிலேயே வளர்ந்தவர்களோ - இதற்கு மாறாக, "இது என்னுடைய தவறாயிருந்தது" என்று கூற முடியும்.*

*நாம் பார்த்துக் கொண்டிருக்கும் வரலாற்றிற்கு நாம் மீண்டும் திரும்புவோம்.*

> *தேவதூதன் எருசலேமை அழிக்கத் தன் கையை அதின்மேல் நீட்டின போது, கர்த்தர் அந்தத் தீங்குக்கு மனஸ்தாபப்பட்டு, ஜனங்களைச் சங்கரிக்கிற தூதனை நோக்கி: ''போதும் இப்போது உன் கையை நிறுத்து'' என்றார்; அந்த வேளையில் கர்த்தருடைய தூதன் எபூசியனாகிய அர்வ னாவின் போரடிக்கிற களத்திற்கு நேரே இருந்தான் (2 சாமு. 24:16).*

*மூலமொழி வசனத்தில், "கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்" என்றுள்ளது [தமிழில் இவ்வாறே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது]. மனஸ்தாபப்படுதல் அல்லது மனந்திரும்புதல் என்றால், "மனதை மாற்றிக் கொள்ளுதல்" என்று அர்த்தப்படுகிறது. தேவனுடைய "மனந்திரும்புதல்" என்பது எப்போதுமே மனிதருடைய மனந்திரும்புதலைச் சார்ந்ததாகவே உள்ளது. 1 நாளாகமம் 21:16ஐ கவனியுங்கள்: தாவீதும் மக்களின் மூப்பர்களும் ''இரட்டுப் போர்த்துக் கொண்டு'' இருந்தார்கள் என்பது மனந்திரும்புதலைச் சுட்டிக்காண்பிக்கிறது.*

*"ஜனத்தை உபாதிக்கிற தூதனை தாவீது கண்டபோது, அவன் கர்த்தரை நோக்கி" (2 சாமு. 24:17அ) பேசத் தொடங்கினார். 1 நாளாகமம் 21:16, "தாவீது தன் கண்களை ஏறெடுத்து, பூமிக்கு வானத்திற்கும் நடுவே நிற்கிற கர்த்தருடைய தூதன் உருவின பட்டயத்தைத் தன் கையிலே பிடித்து, அதை எருசலேமின் மேல் நீட்டியிருக்கக் கண்டான்" என்று கூறுகிறது. தாவீது, "இதோ, நான்தான் பாவஞ்செய்தேன்; நான்தான் அக்கிரமம் பண்ணினேன்; இந்த ஆடுகள் என்ன செய்தது? உம்முடைய கை எனக்கும் என் தகப்பன் வீட்டுக்கும் விரோதமாயிருப்பதாக" (2 சாமு. 24:17ஆ) என்று விண்ணப்பம் செய்தார். இந்த மாபெரும் அறிக்கையானது, வசனம் 10ல் உள்ள அறிக்கையுடன் இணைந்து செல்லுகிறது. தாவீது, ''நான் மாத்திரமே பழிபோடப்பட வேண்டியவனாக இருக்கின்றேன்'' என்று கூறினார். "ஆடுகள்" என்பது தாவீது பொறுப்புதாரியாயிருந்த அவரது குடிமக்களைக்*

*குறிக்கிறது. இது, மக்கள் பரிபூரணப்பட்டவர்களாயிருந்தார்கள் என்று கூறுவதாயிருப்பதில்லை. 2 சாமுவேல் 24:1ஐ திரும்ப நோக்குங்கள். இஸ்ரவேல் மக்கள், தேவனுடைய கோபத்தைத் தூண்டியிருந்தார்கள்.*[3] *அந்தக் கொள்ளை நோயானது தாவீதின் மீது மட்டுமின்றி நாடு முழுவதின் மீதுமான தண்டனையாயிருந்தது என்பது உறுதி. கொள்ளைநோய் வரக் காரணமாயிருந்த குறிப்பிட்ட பாவத்திற்கு மக்கள் பொறுப்பாளிகளா யிருந்ததில்லை என்று மட்டுமே தாவீது அர்த்தப்படுத்தினார்.*

*இப்போது போலவே, அந்த நாட்களிலும், தலைவர்கள் "பலிகடாக் களால்", அதாவது தலைவர்களைப் பாதுகாக்க, பழியைத் தங்கள்மேல் சுமத்தச் சம்மதிக்கின்ற மக்களால் சூழப்பட்டிருந்தார்கள். ஆயினும் தாவீது, எவ்விதமான ராஜ தனிச்சிறப்புரிமையையும் பயன்படுத்தவில்லை. அவர் பழியை வேறு யார் மீதும் போடவில்லை. அவர் மக்கள்மீது பழிபோட வில்லை. அவர் தமது ஆலோசகர்கள் மீது பழிபோடவில்லை. அவர் சாத்தான்மீது பழிபோடவில்லை ("பிசாசுதான் என்னை இதைச் செய்ய வைத்தான்"). அவர் தேவன்மீது பழிபோடவில்லை ("நீர்தானே சாத்தான் என்னைச் சோதிக்கும்படி அனுமதி கொடுத்தீர்"). வசனம் 10ல் அவர் செய்திருந்தது போலவே, மீண்டும் அவர் "நான்தான் பாவஞ் செய்தேன்" என்று மாத்திரமே கூறினார்.*

*இதைக்காட்டிலும் கடினமானது வேறு எதுவும் இல்லை. "நானே இதைச் செய்தேன். நான் மேன்மையாக அறியக்கூடிய அளவுக்கு வயதுடையவனாயிருக்கின்றேன். நான் தேவனுடைய வசனத்தைப் படித்திருக்கின்றேன். சரியானது எது தவறானது எது என்று நான் அறிந்திருக் கின்றேன். என்னைத்தவிர யார் மீதும் பழிபோட என்னால் முடியாது. நான் பாவம் செய்தேன், நான் மகாபாவம் செய்தேன். நான் மதியீனமாய் நடந்து கொண்டேன்" என்று கூறுவது மிகவும் கடினமானதாக உள்ளது. இன்னும் அதிக மக்கள், தங்கள் சொந்த செயல்களுக்குத் தாங்களே முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளப் போதிய அளவுக்கு வளர்ந்தவர்களாக வேண்டியது நமக்கு எவ்வளவாய்த் தேவைப்படுகிறது!*

## உண்மையிலேயே வளர்ந்தவர்கள், தாங்கள் தவறுகின்றபோது வெளியேறிவிடுவதில்லை *(2 சாமுவேல் 24:18, 19; 1 நாளாகமம் 21:18, 19)*

*இந்த ஐந்தாவது சத்தியமானது முந்திய நான்கையும் பிணைக்கிறது: வளர்ந்தவர்கள், தாங்கள் தவறுகின்றபோது வெளியேறிவிடுவதில்லை.*

*ஒருகணம் நீங்கள் உங்களை அந்த முதிய ராஜாவின் இடத்தில் வைத்து, நீங்கள் எவ்விதமாக உணர்ந்திருப்பீர்கள் என்று உங்களையே கேட்டுப் பாருங்கள். நீங்கள் தேவனுக்கு ஊழியம் செய்வதற்கு உங்கள் வாழ்நாள் முழுவதையும் செலவிட்டு இருக்கின்றீர்கள். ஒரு காலகட்டத்தில் நீங்கள் மிகவும் துன்பம் தருகிற பாவம் ஒன்றைச் செய்து, அதலபாதாளத்தில் வீழ்கின்றீர்கள், ஆனால் அந்த வேளையிலிருந்து, நீங்கள் எவ்வாறு இருக்க*

*வேண்டுமென்று தேவன் விரும்புகின்றாரோ, அவ்வாறு இருக்கத் தொடர்ந்து பெருமுயற்சி செய்திருக்கின்றீர்கள். இப்போது நீங்கள் இன்னொரு பெரிய பாவத்தைச் செய்திருக்கின்றீர்கள். இதன் விளைவாக, உங்கள் குடிமக்களில் எழுபதினாயிரம் பேர் இறந்துபோனார்கள். தாய்களும், தந்தையர்களும், மனைவியர்களும், பிள்ளைகளும் அழுது கொண்டிருக்கின்றார்கள். எழுபதினாயிரம் கல்லறைகள் தோண்டப் பட்டுள்ளன. நாடு முழுவதும் துக்கத்தில் ஆழ்ந்திருக்கிறது. நீங்கள் வெறியேறத் தயாராயிருப்பீர்கள் என்று யூகிக்கின்றீர்களா? நீங்கள், "என்ன பயன்? நான் சரியில்லை. நான் தொடர்ந்து பாவம் செய்கின்றேன். நான் இதை [பொறுப்பை] விட்டுவிட்டால் நல்லது" என்று நினைப்பீர்களா?*

*அது பக்குவமற்றவர்கள் செய்யும் செயலாக உள்ளது. அவர்கள் தவறுகின்றபோது, அவர்கள் வெளியேறிவிடுகின்றார்கள்.*

*பக்குவமடைந்தவர்கள் மாறுபட்டவர்களாய் இருக்கின்றார்கள். உண்மையிலேயே வளர்ந்தவர்கள் இவ்வாறு வெளியேறிவிடுவதில்லை. தாவீதைக் கவனியுங்கள்; அவர் தேவனுக்கு முன்பாக நின்று கொண்டு, தமது மக்களுக்காக வேண்டிக் கொண்டிருந்தார். பின்பு தாவீதிடத்தில் மீண்டும் வந்த காத், "நீர் போய், எபூசியனாகிய அர்வனாவின் களத்திலே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தை உண்டாக்கும் என்றான்" (2 சாமு. 24:18). அதற்குத் தாவீது, "அதனால் என்ன பயன்? நான் மீண்டும் பாவம் செய்வேன் என்பதை அறிந்துள்ளபோது, ஏன் இதைச் சரி செய்யவேண்டும்?" என்று கேட்டாரா? இல்லை, மாறாக அவர், "கர்த்தருடைய வார்த்தையின்படியே தாவீது கர்த்தர் கற்பித்த பிரகாரமாக" (2 சாமு. 24:19) செய்தார். தேவனுடைய இரக்கம் மீண்டும் நீட்டிக்கப்பட்டது - தாவீது கீழ்ப்படிந்திருந்தார்! தாவீது தவறிய வேளையிலும் கூட, அவர் தமது வாழ்வை தேவனுடைய சித்தத்தின் படியும் வழியின்படியும் காத்துக் கொள்ளத் தீர்மானமாயிருந்தார்.*

## வளர்ந்தவர்கள் இன்னமும் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டியது அவசியம்
## *(2 சாமுவேல் 24:20-25; 1 நாளாகமம் 21:20-26)*

*அது நம்மைப் பின்வரும் சத்தியத்திடம் கொண்டு வருகிறது: வளர்ந்தவர்கள் இன்னமும் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டியது அவசியம்.*

*அதிகாரத்திற்கு மதிப்பளித்தலில் பொதுவாகக் குறைபாடு உள்ள ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம். அந்தக் கூற்றை உங்களில் பெரும்பான்மையானோர் ஒப்புக்கொள்வீர்கள். ஆயினும், அதிகாரத்திற்கு மதிப்பளிக்க வேண்டியதின் அவசியத்தைப் பற்றி நாம் பேசும்போது, நமது விமர்சனங்களை நாம் இளம் வயதுடையவர்களுக்கே பொதுவாகக் குறிப்பிடுகின்றோம் என்பது கவனிக்க ஆர்வமுடைய விஷயமாக உள்ளது: "தாய் தந்தையின் அதிகாரத்திற்கு நீ மதிப்பளிக்க வேண்டியது அவசியம். உனது ஆசிரியர்களின் அதிகாரத்திற்கு மதிப்பளிக்க வேண்டியது அவசியம். சட்டத்தின் அதிகாரத்திற்கு நீ மதிப்பளிக்க வேண்டியது அவசியம்." அந்தக்*

கூற்றுக்களில் ஒவ்வொன்றும் உண்மையானதாகவே உள்ளது, ஆனால் பின்வருவதை ஆழ்ந்து சிந்தியுங்கள்: அதிகாரத்திற்கு மதிப்பளித்தலில் குறைபாடு என்ற ஊற்றின் தலையாக இருப்பவர்கள் இளம் வயதினர் அல்ல, ஆனால் வயது வந்தவர்களே அவ்வாறு இருக்கின்றார்கள் - மற்றும் இவை யாவற்றிற்கும் ஆதார மூலமாக இருப்பது தேவனுடைய அதிகாரத்திற்கு மதிப்பளித்தலில் குறைபாடு என்ற விஷயமேயாகும்.

உண்மையிலேயே வளர்ந்தவர்கள், தாங்கள் தேவனுக்கு முன்பாகத் தங்களை தாழ்த்துதல் மற்றும் அவரது சித்தத்தைச் செய்ய விரைவுபடுதல் ஆகியவற்றிலேயே, வாழ்வில் தங்கள் கண்ணியம் மற்றும் நோக்கத்தை அறிந்திருக்கின்றார்கள்.

எபூசியனாகிய அர்வனாவின் போரடிக்கும் களத்தில் பலிசெலுத்தும்படி தேவன் தாவீதைக் கேட்டுக் கொண்டார். அந்த இடத்தில் தான் சங்காரத் தூதன் தேவனால் நிறுத்தப்பட்டிருந்தார். போரடிக்கும் களங்கள் என்பவை, பதர்களையும் தூசிகளையும் அடித்துச் செல்லக்கூடிய வகையில் காற்று நன்கு வீசுகிற மேடான வெளிப்பகுதிகளில் அமைந்திருப்பது வழக்கம். குறிப்பிட்ட இந்த போரடிக்கும் களம், எருசலேமின் வடகிழக்குப் பகுதியில் (இன்னமும் நகருடன் இணைக்கப்படாத பகுதியில்), மோரியா மலையின் மீது அமைந்திருந்தது. இங்குதான் ஆபிரகாம், ஈசாக்கைப் பலிசெலுத்தும்படி கூட்டிக்கொண்டு வந்திருந்தார். இங்குதான் சாலொமோனால் [பின்னாட்களில்] தேவாலயம் கட்டப்பட்டது.

அர்வனா யார் என்பது நமக்கு உறுதியாகத் தெரியவில்லை. அவர் எபூசியர்களின் குலத்தலைவராக அல்லது கோத்திர ராஜாவாக இருந்திருக்க வாய்ப்பு உள்ளது (2 சாமு. 24:23), ஆனால் அவர் மனம்மாற்றப்பட்டவரா யிருந்தார். எந்த வகையிலும், அவர் கானான் நாட்டிற்குள் வாழ அனுமதிக் கப்பட்டிருந்தார் மற்றும் அவர் சில காணியாட்சிகளைத் தமக்கென்று வைத்திருந்தார்.

இந்தப் பலியைச் செலுத்தும்படி தேவன் தாவீதுக்குக் கூறியபோது, (தாவீதிடத்தில்) தயக்கம் எதுவும் இருந்ததில்லை. குறிக்கப்பட்ட இடத்திற் குத் தாவீது உடனடியாக விரைந்தார். அதுதான் கீழ்ப்படிதலைப் பற்றிய எல்லா விஷயமுமாக உள்ளது.

1 நாளாகமம் 21:20, தாவீது [அவ்விடத்தை அணுகிய வேளையில்], அர்வனா (ஓர்னான்) "கோதுமையைப் போரடித்துக் கொண்டிருந்தார்" என்று கூறுகிறது.

> அர்வனா ஏறிட்டுப் பார்த்து: ராஜாவும் அவனுடைய ஊழியக்காரரும் தன்னிடத்தில் வருகிறதைக் கண்டு, அர்வனா எதிர்கொண்டுபோய்த் தரைமட்டும் குனிந்து ராஜாவை வணங்கி, "ராஜாவாகிய என் ஆண்டவன் தமது அடியானிடத்தில் வருகிற காரியம் என்ன?" என்று கேட்டதற்கு, தாவீது: "வாதை ஜனத்தைவிட்டு நிறுத்தப்படக் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டும்படிக்கு இந்தக் களத்தை உன் கையில் கொள்ள வந்தேன்" என்றான். அர்வனா தாவீதைப் பார்த்து: "ராஜாவாகிய என் ஆண்டவன் இதை வாங்கிக் கொண்டு, தம்முடைய பார்வைக்கு நலமானபடி பலியிடுவாராக; இதோ, தகனபலிக்கு

> மாடுகளும் விறகுக்குப் போரடிக்கிற உருளைகளும் மாடுகளின் நுகத்தடிகளும் இங்கே இருக்கிறது'' என்று சொல்லி, அர்வனா ராஜயோக்கியமாய் அவை எல்லாவற்றையும் ராஜாவுக்கு கொடுத்தபின்பு ... (2 சாமு. 24:20-23அ).

*இது ஒரு உணர்வெழுச்சிமிக்க தருணமாக இருந்திருக்க வேண்டும். இதற்கு இணையான ஒரு நிகழ்ச்சியை நான் நினைத்துப் பார்க்க முயற்சி செய்தேன். முதலில் நான், நள்ளிரவு வேளையில் என் முன்வாயிற் கதவைத் தட்டுகிற ஒலியைப் பற்றி நினைத்தேன். கதவண்டையில் அலுவலர்களைப் போல் காணப்பட்ட அரை டஜன் மனிதர்கள் நிற்கின்றார்கள், அத்துடன் கார் ஒன்றின் என்ஜின் பக்கமிருந்து, நீராவி வந்து கொண்டிருக்கிற நிலையில் கார் ஒன்று இருக்கிறது. அந்தக் காரில் நன்கு அறியப்பட்ட முக்கியமான நபர் ஒருவர் இருக்கின்றார். வந்திருந்த மனிதர்களில் ஒருவர், "இந்திய ஜனாதிபதி அவர்கள் ஒரு முக்கியமான, இரகசிய வேலையாக இவ்விடத்திற்கு வந்துள்ளார், அவரது காரில் ஒரு சிறு கோளாறு ஏற்பட்டுள்ளது. அவருக்கு உடனடியாக ஒரு கார் தேவைப்படுகின்றது" என்று கூறுகின்றார். நான் இரண்டு அல்லது மூன்று முறைகள் [உமிழ்நீரை] விழுங்கி விட்டு, "இதோ எனது காரின் சாவிகள் ... அத்துடன் என் வங்கி அட்டையும் இதோ" என்று கூறுகின்றேன்.*

*பின்பு எனக்கு இரண்டாவது நினைப்பு ஒன்று வருகிறது. நமது நாட்டில் ஜனாதிபதி என்பவர் உண்மையில் இராஜரீகத்தின் இணையான தன்மையைக் கொண்டவர் அல்ல. விளையாட்டு வீரர்களே நமது மிகப் புகழ்பெற்ற பொழுது போக்குவிக்கும் ''இராஜரீக'' நபர்களாய் இருக்கின்றார்கள். இவ்விடத்தில் நீங்கள் உங்கள் சொந்த விவரிப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். நீங்கள் மிகவும் மதிக்கிற ஒரு நபர் உங்களிடத்தில் வந்து ஒரு வேண்டுகோள் விடுக்கின்றபோது, உங்கள் பதில்செயல் என்னவாக இருக்கும் என்பதைக் கற்பனை செய்துகொள்ளுங்கள்!*

*தாவீதிடம் அர்வனா, ''நீர் உமது பார்வைக்கு எவை நலமாய் உள்ளனவோ, அவை எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளலாம்.[4] மாடுகள் போரடிக்கும் உருளைகளை இழுத்துக் கொண்டுள்ளன, அவற்றை நீர் பலிசெலுத்தலாம். போரடிக்கும் உருளைகளும்[5] மாடுகளின் நுகத்தடிகளும் இருக்கின்றன, அவற்றை நீர் நெருப்புக்குத் தேவையான விறகாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்" என்று கூறினார்.*

> ராஜா அர்வனாவைப் பார்த்து: அப்படியல்ல; "நான் இலவசமாய் வாங்கி, என் தேவனாகிய கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தாமல், அதை உன் கையிலே விலைக்கிரயமாய் வாங்குவேன்'' என்று சொல்லி, தாவீது அந்தக் களத்தையும் மாடுகளையும் ஐம்பது சேக்கல் நிறை வெள்ளிக்குக் கொண்டான் (2 சாமு. 24:24).

*நீங்கள் ஏற்கனவே இவ்வசனப்பகுதியை குறித்து வைக்காதிருந்தால், இப்போது இதைக் குறித்து வைக்க விரும்புவீர்கள். அர்வனாவின் அளிப்பு பெருந்தன்மை வாய்ந்ததாக இருந்தது, ஆனால் பலி என்பது என்ன என்று*

*தாவீது அறிந்திருந்தார். அர்வனா எல்லாவற்றையும் அளித்திருந்தால், அது தாவீதின் பலியாக இராமல், அர்வனாவின் பலியாகவே இருக்கும்! தாவீதின் கூற்று உண்மையிலேயே வளர்ந்த ஒருவரின் கூற்றாக இருந்தது. ஒன்றும் விலை செலுத்தாத தேவபக்தி என்பது ஒரு மதிப்பும் இல்லாத தேவபக்தி யாகவே இருக்கிறது. வளர்ந்தவர் ஒருவர் இலவச சவாரி செய்ய விரும்புவதில்லை, அவர் தமது பங்கை நிறைவேற்ற விரும்புகின்றார்.*

*தேவனுக்குப் பலிசெலுத்துதல் பற்றி உலகத்தில் மூன்று வகையான எண்ணப்போக்குகள் நிலவுகின்றன: மாறுபட்ட எண்ணமுடைய மனிதர், "நான் என் தேவனாகிய கர்த்தருக்குப் பலி செலுத்த மாட்டேன்" என்று கூறுகின்றார். பக்குவமற்ற மனிதர், "எனக்குச் செலவாகும் வகையில் நான் என் தேவனாகிய கர்த்தருக்குப் பலி செலுத்தமாட்டேன்'' என்று கூறுகின்றார். பக்குவமடைந்த தனிநபரோ, "எனக்குச் செலவு ஏற்படுத்தாத ஏதொன்றையும் நான் என் தேவனாகிய கர்த்தருக்குப் பலி செலுத்த மாட்டேன்" என்று கூறுகின்றார்.*

*உண்மையிலேயே வளர்ந்தவர்கள் உண்மையான கீழ்ப்படிதல் என்றால் என்ன என்பதை அறிந்து புரிந்து கொள்ளுகின்றார்கள். அவர்கள், தேவனுக் குக் கீழ்ப்படிதல் என்பது காலம், சக்தி, முயற்சி ஆகியவற்றை விலையாகச் செலுத்த வேண்டிய விஷயமாக உள்ளது என்பதை அறிகின்றார்கள். அவர்கள், தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்பது வசதிக் குறைவுகளுக்குக் காரணமாகக் கூடும் என்பதை அறிகின்றார்கள். அவர்கள், தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்பது தங்களின் பணி அட்டவணைகளில் மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதை அறிகின்றார்கள். மற்றும் அவர்கள், ஆண்டுகள் கடந்து செல்வதினால் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டியதின் அவசியம் குறைந்து போவதில்லை, ஆனால் அந்த அவசியம் அதிகரிக்கின்றது என்பதையும் அறிகின்றார்கள். அவர்கள் உலகப்பிரகாரமான வேலையி லிருந்து ஓய்வு பெறக்கூடும். ஆனால் அவர்கள் தேவனுடைய ஊழியத்தி லிருந்து ஓய்வு பெற முடியாது என்பதை அறிகின்றார்கள்!*

*உண்மையிலேயே வளர்ந்தவர்கள், தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்பதன் அர்த்தம் என்ன என்பதை அறிகின்றார்கள்.*

## வளர்ந்தவர்கள், ஆராதனையைப் புரிந்து கொண்டு அதைப் பேணுகின்றார்கள்

### *(2 சாமுவேல் 24:25; 1 நாளாகமம் 21:26-29)*

*வளர்ந்தவர்கள், ஆராதனை என்பது எதைப் பற்றியது என்பதைப் புரிந்து கொள்கின்றார்கள் - மற்றும் அவர்கள் அதை, ஆண்டுகள் செல்லச் செல்ல அதிகமாகப் பேணுகின்றார்கள்.*

*2 சாமுவேல் 24:25 முதிய ராஜா தமது தேவனுடைய பிரசன்னத்தில் இருக்கும் ஒரு அழகிய சித்திரத்தைத் தீட்டுகிறது: ''அங்கே தாவீது கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, சர்வாங்க தகனபலிகளையும் சமாதான பலிகளையும் செலுத்தினான்; அப்பொழுது கர்த்தர் தேசத்துக்*

*காகச் செய்யப்பட்ட வேண்டுதலைக் கேட்டருளினார்; இஸ்ரவேலின் மேலிருந்த அந்த வாதை நிறுத்தப்பட்டது." தாவீது முதலாவதாக வாதையை நிறுத்துவதற்காக, பாவத்திற்கான தகன பலிகளை செலுத்தினான். பின்பு அவன் சமாதான (அல்லது ஐக்கிய) பலிகளை, "உமக்கு நன்றி" என்று சொல்வதற்காகச் செலுத்தினான்.*

*1 நாளாகமம் 21ம் அதைத் தொடர்ந்து வரும் அத்தியாயங்களும் இதன் தொடர்நிகழ்வைத் தருகின்றன: தேவனிடத்திலிருந்து அக்கினி பலி பொருளின் மீது கீழே இறங்கியது; சங்காரத்தூதன் தமது பட்டயத்தை மீண்டும் அதன் உறையில் இட்டார்; இந்த நிலப்பகுதி தேவாலயம் கட்டுவதற்கான இடமாகத் தேர்ந்து கொள்ளப்பட்டது (1 நாளா. 22:1; 2 நாளா. 3:1 ஆகியவற்றைக் காணவும்) - ஆனால் இப்போது நாம் ஒரே ஒரு சத்தியத்தைக் காண்போம். உண்மையிலேயே வளர்ந்தவர்கள், தேவனை ஆராதிப்பதற்கான தங்களுடைய தேவை அல்லது விருப்பம் ஆகியவற்றில் வளர்ச்சியற்றுப் போவதில்லை.*

*சிலவேளைகளில், இளம் நபர்கள் சிலர் "நான் எனது சொந்தக் காலில் நிற்கப்போதிய அளவுக்கு வளர்ந்த பின்னர், எனது தாய் தந்தையின் கட்டுப்பாட்டில் இருந்து நீங்கிய பின்னர் மிகவும் மகிழ்ச்சி அடைவேன். இது இந்த வாரம் மூன்றுமுறை ஆராதனை என்ற விஷயத்திற்கு முடிவு கட்டும். வாரத்திற்கு ஒருமுறை என்பது எவரொருவருக்கும் போதுமானது" என்று நினைக்கின்றார்கள். இப்படிப்பட்ட சிந்தனை எப்போதாவது உங்கள் மனதில் கடந்து வந்திருந்தால், உங்களைச் சுற்றிலும் இருப்பவர் களில் கர்த்தருக்குள் வளர்ந்து அவருடன் நெருக்கமாய் நடப்பவர்களை உற்று நோக்குங்கள். அவர்கள் ஆராதனைக்கு வரவேண்டும் என்று எவரொருவரும் நிர்ப்பந்திப்பதில்லை. அவர்களுக்கு ஆராதனை என்பது விலையேறப் பெற்றதாக இருப்பதினால் அதைச் செய்கின்றார்கள் - அது ஒவ்வொரு நாளும் விலைமதிப்பற்றதாக வளருகிறது.*

## *முடிவுரை*

*நாம் செய்ய வேண்டியவற்றைச் செய்துள்ளோம் என்று நான் நம்புகின்றேன்:*

*(1) பழைய ஏற்பாட்டை, "நமது போதனைக்காகப் பயன்படுத்துதல்."*

*(2) பழைய ஏற்பாட்டை, நாம் "நீடிய பொறுமையுள்ளவர்களாய்", சகிப்புத் தன்மையுள்ளவர்களாய் இருக்கவும் வெளியேறி விடாதிருக்கவும் வேண்டிக் கொள்ளும்படி பயன்படுத்துதல்.*

*(3) பழைய ஏற்பாட்டை, நமக்கு ஆறுதல் கூறவும் நம்மை "ஊக்குவிக்க வும்" பயன்படுத்துதல். உங்கள் பாவம் என்னவாக இருந்தாலும், நீங்கள் மனந்திரும்பி, தேவனுடைய சித்தத்தைச் செய்தால், அது மன்னிக்கப்படக் கூடும்.*

*(4) பழைய ஏற்பாட்டை நமது "நம்பிக்கையை"க் கட்டி எழுப்புவதற் காகப் பயன்படுத்துதல். நீங்கள் பரிபூரணப்பட்டவராக இல்லாதிருப் பினு ம், நீங்கள் அப்பொழுதும் ஒரு மனிதராக அல்லது பெண்ணாக, சிறுவனாக*

*அல்லது சிறுமியாக, தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவராக இருக்க முடியும். உங்கள் இருதயம் தேவனில் நிலைத்திருந்தால், பரலோகத் தின் நம்பிக்கை உங்களுடையதாக உள்ளது!*

*அதுவே வளர்ந்தவர்களுக்கான நமது வரலாறாக உள்ளது. இது "முன்பு ஒரு காலத்திலே'' என்று தொடங்கியதால், ''அவர்கள் அதன்பின்பு எப்போதும் சந்தோஷமாய் வாழ்ந்து வந்தார்கள்" என்று முடிய வேண்டும். தாவீதைக் கர்த்தர் மன்னித்த பின்பு இது ஒரு சந்தோஷமான முடிவைக் கொண்டிருந்தது. உங்கள் வாழ்வானது தேவன் விரும்பியபடி இருப்பதை நீங்கள் உறுதி செய்து கொண்டால், நீங்களும் ஒரு சந்தோஷமான முடிவைக் கொண்டிருக்க முடியும்.*

---

*குறிப்புகள்:*

[1]*பக்தியற்ற யோவாப் கூட இதில் பாவம் உள்ளடங்கியிருந்தது என்று நினைத்த உண்மையானது (1 நாளா. 21:3) தாவீதின் தலையில் எச்சரிக்கையை ஏற்படுத்தி யிருக்க வேண்டும் - ஆனால் அது அவ்வாறு செய்யவில்லை. உண்மையில் யோவாபின் எதிர்ப்பு தெளிவற்றதாக உள்ளது. ஜான் வில்லியம்ஸ் அவர்கள், "யோவாப் சரியான நிலைப்பாட்டை மேற்கொண்டார், ஆனால் அது தவறான காரணங்களுக்கானதாக இருந்தது" என்று கூறியுள்ளது சரியானதாகவே இருக்கிறது.* (*First and Second Samuel* [Abilene, Tex.: ACU Press, 1987], 411, 412). [2]*"[தாவீது] தமது சொந்தத்தில் சரியாக இருந்ததாகச் சாத்தான் இரகசியமாய்க் கூறியதைக் கவனிக்கின்றார்"* (L. Allen, *The Communicator's Commentary: 1, 2 Chronicles* [Waco, Tex.: Word Books, 1987], 140). [3]*இந்த வரலாறு எப்போது நடைபெற்றது என்று நமக்குத் தெரியாதபடியால், ''கர்த்தருடைய கோபம் மக்களுக்கெதிராகப் பற்றியெரியும்படிக்கு" அவர்கள் செய்தது என்ன என்று நாம் அறிய இயலாது. இது நாம் அறிந்துள்ளவைகளான, அப்சலோமின் கலகத்தில் அவர்களின் ஒத்துழைப்பாகவோ அல்லது பதிவு செய்யப் படாத விஷயமாக இருந்த நாட்டளவிலான குறைவுபடுதலாகவோ இருந்திருக்க லாம்.* [4]*இது ஒப்பந்தங்களைத் தொடங்குவதற்கான வழக்கமான வழிமுறையாக இருக்கலாம். இது, அர்வனா ஊதியம் எதையும் எதிர்பார்க்கவில்லை என்று அர்த்தப் படுத்த வேண்டும் என்று அவசியமில்லை.* [5]*போரடிக்கும் உருளைகள் என்பவை கனத்த, தட்டையான பலகைகளில் கீழ்ப்புறத்தில் இரும்புக் கம்பிகள் நீட்டிக் கொண்டிருக்கும் அமைப்பில் செய்யப் பட்டிருந்தன.*